# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 314/2025** |
| Prosecution witness | : | P.W. 2 (Additional Witness) |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | மகாலிங்கம் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் காவல் நிலையம் |
| Age | : | 52 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. Accused Absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024 ம் ஆண்டு குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு. ராஜ் என்பவர் தற்பேது வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும், மேற்படி காவல் ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 05.05.2024 ம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு. ராஜ் என்பவருடன் முதல் நிலை காவலர் திரு.பாரதிராஜன் மற்றும் இரண்டாம் நிலை காவலர் சக்திவேல் ஆகியோர்களுடன் எங்கள் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் கண்காணித்தபோது வேம்பனூர் அய்யனார் கோவில் அருகே TN 68 AE 9425 என்ற பதிவெண் கொண்ட KTM இருசக்கர வாகனத்தை பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் இரு சக்கர வாகனத்தின் முன்பக்க டயரை கீழே வைத்தும் முன்பக்க டயரை தூக்கியவாறு வீலிங் செய்தவரை மடக்கி பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் திரிசங்கு மகன் அஜய்ராஜ் என்று கூறியுள்ளார். மேற்படி நபர் பொது மக்களுக்கு அச்சதை ஏற்படுத்தும் வகையிலும் அதிவேகமாகவும், இருசக்கர வாகனத்தை ஓட்டியதால் மேற்படி நபரை குற்ற காரணம் கூறி கைது செய்துள்ளார். மேலும் எதிரி பயன்டுத்திய கைபற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல் ஆய்வாளருடன் சென்ற முதல்நிலை

காவலர் திரு.பாரதிராஜன் மற்றும் இரண்டாம் நிலை காவலர் திரு. சக்திவேல் ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களுடன் நிலையம் வந்து எதிரியின்மீது காவல் நிலைய குற்ற எண் 142/2024 இதச சட்டப்பிரிவு 279, உ.இ 184, 188, மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் எதிரிமீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரியை நிலைய பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விவரத்தினை இவ்வழக்கு கோப்பின் ஆவணத்தின் அடிப்படையில் நான் தெரிந்து கொண்டடேன். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 , 2 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரியின் செய்கையானது இதச சட்டப்பிரிவு 279, உ.இ 184, 188, மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றமென கடந்த 05.05.2025 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் தனி நபர் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் காவல் ஆய்வாளரே புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். பொதுமக்களுக்கு இடையூறு செய்ததாக பொது மக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 17:18:14 +0530

District Munsif cum
Judicial Magistrate,
Kodavasal.